**முதன்மை சார்பு நீதிமன்றம், மயிலாடுதுறை**
**முன்னிலை திருமதி. பி. சுதா, பி.காம்., பி.எல்.,**
**முதன்மை சார்பு நீதிபதி.**
**MCOP.No.141/2024**

பெயர் : செந்தில்முருகன் (PW1)

த/பெ. : பக்கிரிசாமி

தேதி : 09.04.2026.

சாட்சி அழைக்கப்பட்டு உறுதி மொழி செய்யப்பட்டது.

**2ம் எதிர்மனுதாரர் தரப்பு குறுக்கு விசாரணை:-**

விபத்து எந்த தேதியில் எந்த இடத்தில் நடந்தது என்றால் சரியாக நினைவு இல்லை. எனது வாகனத்திற்கு முன்னே சென்ற டாட்டா ஏசி வாகனத்தின் பின்புறம் நான் சென்றுகொண்டிருந்தபோது எனது வண்டியை பிரேக் பிடித்து நிற்காமல் டாட்டா ஏசி வாகனத்தின் பின் பக்கத்தில் மோதி விபத்து ஏற்பட்டதாக முதல் தகவல் அறிக்கையில் சொல்லப்பட்டிருக்கிறது என்றால் சரிதான். விபத்து எனது கவனக்குறைவால் நடந்தது என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்றபோது எனக்கு ஓட்டுனர் உரிமம் உண்டா என்றால் இல்லை. விபத்து சமயத்தில் நான் ஓட்டிச்சென்ற இருசக்கர வாகனத்திற்கு காப்பீடு இல்லை என்றால் தெரியவில்லை. விபத்து சமயத்தில் ஓட்டுனர் உரிமம் மற்றும் காப்பீடும் இல்லை என்று தெரிந்தும் மோட்டார் வாகனத்தை ஓட்டிச்சென்றது தவறு என்றால் சரியல்ல. விபத்து சமயத்தில் மனு அருந்தி வாகனத்தை ஓட்டிச்சென்றேன் என்றால் தெரியாது. மசாஆ2 குடிபோதையில் வாகனத்தை ஓட்டிச்சென்றதாக குறிப்புகள் உள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. முன்னே சென்ற1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டாட்டா ஏசி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்யப்படவில்லை என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. 1ம் எதிர்மனுதாரருக்கு சொந்தமான டாட்டா ஏசி வாகனத்தின் மோட்டார் வாகன ஆய்வாளர் அறிக்கை தாக்கல் செய்தால் தான் ஆவணங்கள் முறையாக உள்ளனவா என தெரியவரும் என்றால் சரிதான்.

நான் தாக்கல் செய்த மருத்துவ விடுவிப்பு குறிப்புகளில் நான் நல்ல நிலையில் இருப்பதாக குறிப்புகள் உள்ளது என்றால் சரியல்ல. 19.05.2022ல் நல்ல நிலையில் விடுவிப்பு பெற்ற பிறகு நான் மருத்துவர்கள் சொன்ன பரிந்துரையை பின்பற்றாத காரணத்தினால் தான் மீண்டும் 2023 ஜனவரி மாதத்தில் தஞ்சாவூர் மீனாட்சி மிஷனில் சிகிச்சை பெற்றேன் என்றால் சரியல்ல. விபத்துக்கு முன்னர் சென்ற வேலைக்குதான் தற்போதும் வேலை செய்து வருகிறேன். அதனால் விபத்துக்கு பிறகு எனது வேலைக்கும் வருமானத்திற்கும் எந்தவித பாதிப்பும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. விபத்து சமயத்தில் நான் தலைக்கவசம் அணிந்து செல்லவில்லை என்றால் சரியல்ல. நான் தலைகவசம் அணிந்து சென்றேன். உண்மையில் விபத்து சமயத்தில் தலைதகவசம் அணிந்து சென்றால் மேற்படி பாதிப்பு

ஏற்பட்டிருக்காது என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த மருத்துவ ரசீதுகள் வழக்கிற்காக தயார் செய்யப்பட்டது என்றால் சரியல்ல. மருத்துவ பில்கள் நான் வேலை பார்க்கும் நிறுவனத்தின் காப்பீட்டு நிறுவனத்தின் மூலம் claim செய்துவிட்டேன் என்றால் சரியல்ல. நான் தாக்கல் செய்த (மசாஆ9) மருத்துவ குறிப்புகளில் Insurance approval amount Rs.1,73,231/- என குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மசாஆ10ன் ஒட்டு மொத்த மருத்துவ பில்கள் தான் மசாஆ9 என்றால் சரியல்ல. மசாஆ9 பில்கள் summary credit bill copyஎன குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் அதுப்பற்றி எனக்கு தெரியாது. மசாஆ9 அசல் ஆவணம் கிடையாது என்றால் சரியல்ல. மேற்படிஅசல் ஆவணத்தை காப்பீட்டு நிறுவனத்தில் கொடுத்துவிட்டேன் என்றால் சரியல்ல

மசாஆ10ல் 2024 முதல் 2026 வரை மருத்துவ ரசீதுகள் தாக்கல் செய்யப்பட்ட நிலையில் மேற்படி காலத்திற்கு மருத்துவ குறிப்புகள் தாக்கல் செய்யப்படவில்லை என்றால் சரியல்ல. ஆகவே மசாஆ10 ஏற்கத்தக்க ஆவணம் இல்லை என்றால் சரியல்ல. மருத்துவ குழு எனக்கு வழங்கியுள்ள ஊனசதவீதம் மிகைப்படுத்தி வழங்கியுள்ளது என்றால் சரியல்ல. எனது காயத்திற்கும், இழப்பிற்கும் ஏற்ப நஷ்ட ஈடு கோராமல் மிகைப்படுத்தி கோரியுள்ளேன் என்றால் சரியல்ல. விபத்தில் எனது கவனக்குறைவும் அஜாக்கிரதையின் காரணத்தினால் விபத்து ஏற்பட்டது என்பதால் 2ம் எதிர்மனுதாரரை பொருத்து இந்த மனு தள்ளுபடி செய்யத்தக்கது என்றால் சரியல்ல.

இத்திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல அதனை என்னால் தட்டச்சரிடம் சொல்லப்பட்டு, தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு, சாட்சியிடம் படித்துக் காண்பித்து அவரால் சரியென ஒப்புக் கொள்ளப்பட்டது.

முதன்மை சார்பு நீதிபதி,
மயிலாடுதுறை.